**செய்தி வெளியீடு எண்.317** **நாள் 07.04. 2010.**

# கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்

கோடை விடுமுறையை பயனுள்ள முறையில் மாணவர்கள் பயன்படுத்திடவும், நலிந்து வரும் கலைகளை காப்பாற்றிடவும், மாணவ, மாணவியர்களிடையே கலை ஆர்வத்தை ஊக்குவித்திடவும், கலை பண்பாட்டுத்துறை தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மூலமாக ஆண்டுதோறும் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்களை நடத்தி வருகிறது. இவ்வாண்டும் தமிழ்நாட்டின் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் கோடைக்கால கலைப்பயிற்சிகள் நடத்திட கலை பண்பாட்டுத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. கோடைக்கால கலைப்பயிற்சியினை அந்தந்த மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களில் கலை பண்பாட்டுத்துறை மண்டல உதவி இயக்குநர்கள் நடத்திட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சென்னையில் கீழ்வரும் நான்கு இடங்களில் கலைப்பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

**1. சேலையூர் மையம் – ஜியான் மெட்ரிக்குலேசன் பள்ளி, இந்திரா நகர், சென்னை–73.**
**தொலைபேசி எண். 22290665, 22292674**

பயிற்றுவிக்கப்படும் கலைகள் : 1. நடனம், 2. குரலிசை, 3. ஓவியம்
4. கீபோர்டு 5. தற்காப்புக் கலை (கராத்தே)
6. யோகா

பயிற்சி நாட்கள் : 15.4.2010 முதல் 30.04.2010 வரை

பயிற்சி நேரம் : காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை.
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை

**2. இராமபுரம் மையம் – டாக்டர் எம்.ஜி.ஆர். பேச்சு மற்றும் செவித்திறன் குறையுடையோர் பள்ளி, இராமவரம், சென்னை–89**
**தொலைபேசி எண். 22490629**

பயிற்றுவிக்கப்படும் கலைகள் : முற்பகல் – 1. நடனம், 2. ஓவியம்
பிற்பகல் – 1. கணினி 2. கைவினை

பயிற்சி நாட்கள் : முதல் முகாம் – 19.4.2010 முதல் 07.05.2010 வரை
இரண்டாம் முகாம் – 10.5.2010 முதல் 29.5.2010 வரை

பயிற்சி நேரம் : காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை.
பிற்பகல் 1.30 மணி முதல் 3.30 மணி வரை
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை

**3. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், சென்னை–28.**
**தொலைபேசி எண். 24618162**

பயிற்றுவிக்கப்படும் கலைகள் : 1. பரதநாட்டியம் 2. குரலிசை 3. ஓவியம்
4. டிரம்ஸ் 5. சிலம்பாட்டம் 6. வீணை
7. கராத்தே 8. தையல் 9.நாடகம்

பயிற்சி நாட்கள் : முதல் முகாம் : 26.04.2010 முதல் 12.05.2010 வரை
இரண்டாம் முகாம் : 14.05.2010 முதல் 28.05.2010 வரை

பயிற்சி நேரம் : பிற்பகல் 4.00 மணி முதல் 6.00 மணி வரை

**4. தாம்பரம் மையம்_– அவ்வை நடுநிலைபள்ளி, மேற்கு தாம்பரம், சென்னை–45.**
**தொலைபேசி எண்.9444670382**

பயிற்றுவிக்கப்படும் கலைகள் : 1. நடனம், 2. ஓவியம், 3. கராத்தே

பயிற்சி நாட்கள் : 03.05.2010 முதல் 21.05.2010 வரை

பயிற்சி நேரம் : காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை.

**5._ ஸ்ரீ.வி. பாட்சா ரெட்டி உயர்நிலைப்பள்ளி, வில்லிவாக்கம், சென்னை–49.**
**தொலைபேசி எண். 26175769**

பயிற்றுவிக்கப்படும் கலைகள் : 1. பரதநாட்டியம் 2. குரலிசை 3. ஓவியம்
4. டிரம்ஸ் 5. சிலம்பாட்டம் 6. யோகா
7. கணினி (கம்பியூட்டர்)

பயிற்சி நாட்கள் : 03.05.2010 முதல் 21.05.2010 வரை

பயிற்சி நேரம் : காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை

இக்கலைகளை பயிற்றுவிப்பதற்கு மிக குறைந்த அளவு கட்டணம், ஒரு கலைக்கு ரூ.100/– மட்டுமே! பயிற்சியில் சேர்வதற்குரிய விண்ணப்பங்களும், விவரங்களும் அந்தந்த பள்ளிகளில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சி நிறைவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை –9.